தினமணி

# திறந்தவெளியில் வீணாகும் 1 லட்சம் டன் நெல் மூட்டைகள்

த. ஞானப்பிரகாசம்

First Published : 08 Sep 2010 02:11:08 AM IST



ஒசூர்: ஒசூரில் அந்திவாடி திறந்தவெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சுமார் 1 லட்சம் டன் நெல் மூட்டைகள், மழையிலும், வெயிலிலும் சேதமடைந்து வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாதம்தோறும் 15 ஆயிரம் டன் ரேஷன் அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் வாங்கி உள்ளூரில் அரவை செய்து அரிசி மூட்டைகள் ரேஷன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு வாணிபக் கழகம் கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு ரேஷன் அரிசிக்காக அதிக அளவில் நெல் கொள்முதல் செய்து வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழகத்தின் பிற மாவட்ட நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளுக்கு அனுப்பப்படுகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர்-தேன்கனிக்கோட்டை சாலையில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் நியாயவிலை கடைகளுக்கு அனுப்ப வேண்டிய ரேஷன் அரிசி, கோதுமை உள்ளிட்ட தானியங்கள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளன.

அங்கு போதிய இடவசதி இல்லாததால், புதியதாக கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை அங்கு வைக்க முடியவில்லை.இந்நிலையில், ஒசூர் தளி சாலையில் உள்ள அந்திவாடி திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் சுமார் ஒரு லட்சம் டன் நெல் மூட்டைகள் டெல்டா பகுதியில் இருந்து வாங்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் மூட்டைகள் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, தளி, ஒசூர், வேப்பனப்பள்ளி, பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 21 தனியார் அரிசி ஆலைகள் மூலம் அரவை செய்து ரேஷன் கடைகளுக்கான அரிசி அனுப்பப்படுகிறது.

திறந்தவெளியில் சேமிக்கப்பட்டு வரும் நெல் மூட்டைகள் பெயரளவில் பிளாஸ்டிக் தார்பாய்கள் மூலம் மூடப்பட்டுள்ளன. இவை பலத்த காற்றுடன் மழை பெய்யும்போது சேதமடைந்து, நெல் மூட்டைகள் நனைந்து விடுகின்றன. அப்படி நனைந்துவிடும் நெல் பல நேரங்களில் முளைக்கட்டி விடுகிறது. இதுகுறித்து வாணிபக் கிடங்கு கண்காணிப்பாளர் வெங்கடேஷ் கூறியது:

இம்மாவட்டத்துக்கு மாதத்துக்கு 15 ஆயிரம் டன் ரேஷன் அரிசி தேவை. அதிக எண்ணிக்கையிலான நெல் மூட்டைகளைப் பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்கு போதுமான கிடங்கு வசதி இங்கே இல்லை. இதனால் அந்திவாடி விளையாட்டு மைதானத்தில் அடுக்கி வைக்கப்படுகின்றன. தற்போது 1 லட்சம் டன் நெல் மூட்டைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன என்றார்.

**விவசாயத்துக்கு தனி பட்ஜெட் தேவை**

First Published : 08 Sep 2010 01:24:37 AM IST

அகோலா (மகாராஷ்டிரம்), செப்.7: ரயில்வே துறைக்கு தனி பட்ஜெட் தயாரிப்பது போல் நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயத் துறைக்கென்று ஏன் தனி பட்ஜெட் தயாரிக்கக்கூடாது என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியிடம் மகாராஷ்டிர கல்லூரி மாணவர்கள் கேள்வி எழுப்பினர்.

விவசாயத்துறைக்கென்று தனித்த பட்ஜெட் தயாரிப்பது அவசியம் என்றும் அவர்கள் ராகுல் காந்தியிடம் வலியுறுத்தினர்.

நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இளைஞர்களையும், மாணவர்களையும் சந்தித்து வருகிறார் காங்கிரஸ் இளம் தலைவர் ராகுல் காந்தி. அந்த வகையில் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பஞ்சாப் ராவ் தேஷ்முக் கிரிஷி வித்யாபீட வேளாண் கல்லூரிக்கு செவ்வாய்க்கிழமை சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலின் போது வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது முதல் விவசாயத்துக்கு தனி பட்ஜெட் போடுதல் வரை அடுக்கடுக்கான கேள்விகளை ராகுல் காந்தியிடம் கேட்டனர்.

விவசாயத்துக்கு தனி பட்ஜெட் தயாரிப்பது குறித்த மாணவர்களின் கேள்விக்கு ராகுல் காந்தி நேரடியாகப் பதிலளிக்கவில்லை. விவசாயத் துறையின் வளர்ச்சிக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதேசமயம் ரயில்வே துறை பரந்துவிரிந்த உள்கட்டமைப்பை கொண்டிருப்பதாகவும், அதற்கு தனி பட்ஜெட் அவசியம் என்றும் நியாயப்படுத்தினார்.

நகர்ப்புறத்தில் போதுமான அடிப்படை வசதி இல்லையே... நகர்ப்புற மக்கள் போதுமான அடிப்படை வசதியில்லாமல் பரிதவிக்கின்றனரே என்ற மாணவர்களின் கேள்விக்கு பதில் அளித்த ராகுல் காந்தி, கிராமப்புறங்களில் இருந்து மக்கள் தொடர்ந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்கின்றனர். இதனால் நகர்ப்புறங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதி பிரச்னை நிலவுகிறது என்றார்.

கிராமப்புறங்களில் இருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதைத் தடுப்பதற்காகக் கிராமப்புறங்களை நகர்ப்புறங்களாக மாற்றிவிட முடியாது. கிராமப்புறங்களின் பாரம்பரிய அடையாளத்துக்கு பங்கம் ஏற்படக்கூடாது. அதேசமயம் கிராமப்புற மக்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறையாக உள்ளது என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

நீண்டநாள்களுக்கு முன்பு ஒரு கிராமத்துக்கு சென்றதை நினைவுகூர்ந்த ராகுல் காந்தி, அந்த கிராமத்தில் தங்களது குழந்தைகளுக்கு உடுத்த ஆடைகூட வாங்கிக் கொடுக்க முடியாத வறுமை நிலையில் வாழும் தம்பதியரை சந்தித்தேன். அந்த சம்பவம் எனது மனதை வெகுவாகப் பாதித்தது. இதையடுத்துதான் தொடர்ந்து கிராமங்களுக்கு சென்று மக்களின் வாழ்க்கை நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன் என்றார்.

விவசாயிகள் தற்கொலை ஏன்? விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது தொடர்கதையாக இருந்து வருகிறதே என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில், மகாராஷ்டிரத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். அவரின் மனைவி கலாவதியை இரு ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்து அவருக்கு வேண்டிய உதவியை அளிக்க உறுதி அளித்தேன். இதுகுறித்து அப்போது நாடு முழுவதும் பெரிய அளவில் பேசப்பட்டதை நீங்கள் (மாணவர்கள்) அறிவீர்கள். நம் நாட்டில் கடன் தொல்லையால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது தொடர்கதையாக உள்ளது உண்மைதான். இது கவலைக்குரிய விஷயம் என்றார்.

இந்த சந்திப்பின் நிறைவில், மாணவர்கள் அனைவரும் விருப்பம் இருந்தால் இளைஞர் காங்கிரஸில் இணைவதற்கு அழைப்புவிடுத்தார் ராகுல் காந்தி.

நம் நாட்டை வழிநடத்த திறமையான இளைஞர்கள் தேவை. உங்களுக்கு (மாணவர்கள்) அரசியலுக்கு வர ஆர்வம் இருந்தால் துணிந்து வாருங்கள். மத்திய அரசும், மாநில அரசுகளும் மக்களுக்கு எத்தனையோ நலத்திட்டங்களை செயல்படுத்துகின்றன. ஆனால் இத்திட்டங்களின் பயன் கடைக் கோடியில் வாழும் குடிமகனுக்கு கிடைப்பதில்லை. இதற்கு காரணம் அரசு அமைப்பில் உள்ள ஓட்டைதான். இதை நீங்கள்தான் சரி செய்ய வேண்டும் என்றார் ராகுல் காந்தி.

மக்கள் மத்தியில் பணத்தை விநியோகிப்பதால் பயனில்லை. இதனால் அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டுவிடாது. இதற்குப் பதிலாக உள்கட்டமைப்பு மற்றும் பாசன வசதிகளை மேம்படுத்துவதில் பணத்தை செலவிடுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**பணம் தராமல் இழுத்தடிப்பு: தென்னை விவசாயிகள் வேதனை**

First Published : 07 Sep 2010 11:41:44 AM IST

பல்லடம், செப்.6: கொப்பரை கொள்முதல் செய்த விவசாயிகளுக்கு பணம் தராமல் அரசு கொப்பரை கொள்முதல் மைய அதிகாரிகள், காலதாமதம் செய்து வருவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பல்லடம் அருகே சுல்தான்பேட்டை பகுதியில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு பறிக்கப்படும் இளநீர் சுவைமிக்கதாக இருப்பதால் கோவை, திருப்பூர் உள்பட பல்வேறு ஊர்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொப்பரை காங்கயம், வெள்ளக்கோவில் பகுதியில் உள்ள எண்ணெய் மில்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பல்லடம் மற்றும் செஞ்சேரியில் அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் செயல்படுகின்றன. ஒரு கிலோ | 44.50க்கு தரம் பிரித்து கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கு கொப்பரை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு முன்பு 20 நாட்களுக்குள் பணம் காசோலையாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது 40 நாட்கள் ஆகியும் இன்னும் காசோலை வழங்கப்படவில்லை. இதற்கு அதிகாரிகள் உரிய பதில் அளிக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

பணம் கிடைப்பதில் ஏற்படும் காலதாமதம் காரணமாக அரசு விலையை விட வெளிமார்க்கெட்டில் விலை குறைவாக இருந்தபோதும் (கிலோ | 39), வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**பச்சை மிளகாய் விலை உயர்வு**

First Published : 07 Sep 2010 11:41:32 AM IST

பல்லடம், செப்.6: பச்சை மிளகாய் கொள்முதல் விலை கிலோவிற்கு | 13 ஆக உயர்ந்துள்ளது.

பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் 1500 ஏக்கரில் குட்டை சம்பா, உருண்டை ரக பச்சை மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு அறுவடை செய்யப்படும் மிளகாய் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மற்றும் கேரளத்துக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த 4 நாட்களுக்கு முன்பு கிலோ | 10க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அடிக்கடி பெய்த மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டு சந்தைக்கு வரத்து குறைந்ததால் கொள்முதல் விலை கிலோ | 13 ஆக விலை உயர்ந்துள்ளது.

**செம்மை நெல் சாகுபடி குறித்த முகாமில் பங்கேற்க அழைப்பு**

First Published : 07 Sep 2010 10:48:50 AM IST

பரமத்தி வேலூர், செப்,6: பரமத்தி வேலூர் தாலுகா, கபிலர்மலை வட்டாரத்திற்கு உள்பட்ட பகுதிகளில் வேளாண்மைத்துறை சார்பில், செம்மை நெல் சாகுபடி குறித்த முகாம்கள் நடைபெறவுள்ளது. இதில் விவசாயிப் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேளாண்மை உதவி இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.

பெரியசோளிபாளையம்,பாண்டமங்கலம், வடகரை ஆத்தூர், வெங்கரை, கொந்தளம், ஜேடர்பாளையம்,கபிலக்குறிச்சி, பொன்மலர் பாளையம், சேளூர், சுள்ளிபாளையம், குரும்பலமகாதேவி, பிலிக்கல்பாளையம், அய்யம்பாளையம்,ஆனங்கூர், திடுமல் போன்ற கிராமங்களில் செப்டம்பர் 2-ம் தேதி தொடங்கி 24-ம் தேதி வரை செம்மை நெல் சாகுபடி முனைப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்தந்த பகுதிகளிலுள்ள விவசாயிகள் இந்த முனைப்பு முகாமில் பங்கேற்று செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் தொழில்நுட்பங்களையும், மானிய விவரங்களையும் தெரிந்து கொள்ளுமாறு கபிலர்மலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் நவச்சிவாயம் அழைப்பு விடுத்துள்ளார்.

**அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் மோட்டார் வழங்க கோரிக்கை**

First Published : 07 Sep 2010 10:42:21 AM IST

ஈரோடு, செப். 6: அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் மோட்டார் வழங்க வேண்டுமென தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், மாவட்ட தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமையில் ஈரோட்டில் திங்கள்கிழமை நடைபெற்றது. மாநிலத் தலைவர் கே.சி.ரத்தினசாமி, மாவட்ட செயலாளர் சுப்பு என்கிற முத்துசாமி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தமிழக சட்டமேலவையில் அனைத்து விவசாயிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் தமிழகத்தை 6 விவசாய மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மேலவை உறுப்பினர் பதவி அளிக்க வேண்டும்.

கீழ்பவானி பாசனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள அனைத்து அரசாணைகளையும் அமல்படுத்த வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மாவட்ட நிர்வாகமும், மாநில அரசும் உறுதியாக செயல்படுத்த வேண்டும். மாநில அரசு அறிவித்துள்ள விவசாயிகளிடம் உள்ள மின்மோட்டார்களுக்கு பதில் புதிய மின் மோட்டார்கள் வழங்கும் திட்டம் வரவேற்புக்குரியது.

அதேசமயம் சிறு,குறு விவசாயிகள் என்று வேறுபடுத்தாமல் அனைத்து விவசாயிகளுக்கும் தற்போது எவ்வளவு குதிரைசக்தி மின்மோட்டார் அளவு பயன்பாட்டில் உள்ளதோ, அதே சக்திக்கு மின்மோட்டாரை மாற்றித்தர வேண்டும்.

**ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்கல்**

First Published : 07 Sep 2010 11:35:12 AM IST

சங்ககிரி, செப். 6: மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு கரை வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதையடுத்து, வேளாண் துறை ஆத்மா திட்டத்தின் கீழ் தேவூர் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத் திடல் அமைப்பதற்கு தேவையான இடுபொருட்கள் வழங்கும் விழா தேவூர் துணை விரிவாக்க மையத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

÷சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.சௌந்தரராஜன் தலைமை வகித்தார். மாவட்ட இணை இயக்குநர் எஸ்.கருணாநிதி கலந்து கொண்டு, 10 விவசாயிகளுக்கு தலா | 3 ஆயிரம் மதிப்பிலான நெல் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டம், மார்க்கர் நடவு கருவி, கோனோவீடர் உருளும் களைக் கருவி ஆகியவை வழங்கிப் பேசினார் (படம்).

வேளாண் அலுவலர்கள் ரகுவீரன், கண்ணன், சக்திவேல், தனபால், பன்னீர்செல்வம், குப்பண்ணன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

தினமலர்

**கருணை சாகுபடி திடீர் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:08 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் கருணை கிழங்கு சாகுபடி அதிகரித்துள்ளது.சங்கராபுரம் தாலுகா அரசம்பட்டு, செல்லம் பட்டு, கிடங்குடயான் பட்டு, விரியூர், மன்மலை, மாத்தூர் ஆகிய ஊர்களில் விவசாயிகள் அதிகளவில் கருணை சாகுபடி செய் துள்ளனர். குறைந்த செலவில் ஏக்கருக்கு ஆயிரம் கிலோ முதல் 1500 கிலோ வரை மகசூல் கிடைப்பதால் சாகுபடி பரப்பு திடீரென அதிகரித்துள்ளது.ஒரு கிலோ 4 ரூபாய்க்கு வியாபாரிகள் நேரில் விளைநிலத்திற்கு வந்து மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது.

**செம்மை நெல் சாகுபடிக்கு ரூ.3,000 மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:12 IST

ராசிபுரம்: "செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தமிழக அரசு 3,000 ரூபாய் மானியம் வழங்குகிறது' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து வரும் மழையை பயன்படுத்தி விவசாயிகள் அதிக பரப்பளவில் நெல் பயிரிட்டுள்ளனர். நாற்றங்காலில் பாலீதீன் பை அல்லது யூரியா சாக்கு இவைகளின் மேல் 3 செ.மீ., உயரம் மேடை அமைத்து ஒரு மீ., அகலம், 8 மீ., நீளம் கொண்ட 5 பாத்திகள் அமைக்கவும். மேலும், சென்டுக்கு நன்கு பொடி செய்த டி.ஏ.பி., உரம் ஒரு கிலோவும், அதனுடன் அசோஸ்பைரில்லம், 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் மேடையில் இட்டு மூன்று கிலோ முளை கட்டிய விதைகளை விதைப்பு செய்ய வேண்டும்.

அதில் கிடைக்கும் வாழிப்பான வீரியமான இளம் வயது நாற்றுகளை கொண்டு, வரிசை முறையில் நடவு செய்தால் அதிக மகசூல் பெறலாம். செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், தமிழக அரசு 3,000 ரூபாய் மானியம் அளிக்கிறது. ராசிபுரம் வட்டாரத்தில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நாட்டுக்கோழியை பண்ணையில் வளர்த்தால் அதிக எடையுடன் லாபம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:00 IST

ஈரோடு: ""மேய்ச்சல் நிலங்களில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளை விட பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் சமச்சீர் உணவுடன் மூன்று மாதத்தில் நல்ல எடையை தருகிறது,'' என, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய டாக்டர் கூறியுள்ளார். ஈரோடு மாவட்டத்தில் 106 முட்டை கோழி பண்ணைகளில் 41.38 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 1,197 கறிக்கோழி பண்ணைகளில் 63.9 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. பெருந்துறை, ஈரோடு பகுதியில் முட்டை கோழி பண்ணைகளும், காங்கேயம், தாராபுரம், மூலனூர் பகுதிகளில் கறிக்கோழி பண்ணைகளும் அதிகளவில் உள்ளன. முன்பெல்லாம் கிராமபுறத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகமிருந்தது. வீட்டுக்கு பத்து முதல் 15 கோழிகள் வளர்க்கப்பட்டன. இந்த கோழிகள் பெரும்பாலும் வேளாண் நிலத்தில் கிடக்கும் தானியங்கள், புழு, பூச்சிகளை உண்டு வாழ்ந்தன. ஆண்டுக்கு 60 முட்டைகள் வரை உற்பத்தி செய்தன. இப்போது பிராய்லர் கோழிகளைப் போல், நாட்டுக் கோழிகள் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 13க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழி

பண்ணைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுக் கோழிகள் உள்ளன. இங்குள்ள பண்ணைகளில் தாய்க்கோழி மூலம் மூட்டைகள் மற்றும் குஞ்சுகள் (சிட்ஸ்) உற்பத்தி செய்யப்படுகிறது. முட்டைக்காக வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு இரண்டு சதுர அடியிடம் போதுமானது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிக்கு ஒரு சதுரஅடி இடம் போதுமானது. பிராய்லர் கோழியை விட நாட்டுக்கோழி இறைச்சியில் சுவை அதிகம். நாட்டுக்கோழிக்கு தீவனச் செலவும் குறைவுதான். நாட்டுக்கோழிகள் "வெள்ளை கழிச்சல்' நோயால் மட்டுமே அதிகம் பாதிக்கப்படும். அவற்றை தடுக்க மாவட்ட கால்நடை மருத்துவமனையில் பிரதிவாரம் சனிக்கிழமை தடுப்பூசி போடப்படுகிறது. கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் டாக்டர் தனசீலன் கூறியதாவது: நாட்டுக்கோழிகளை இருமுறையில் வளர்க்கலாம். ஒன்று தரையில் உமி போட்டு வளர்க்கலாம். மற்றொன்று கூண்டுக்குள் வளர்க்கலாம். நாட்டுக்கோழிக்கு சாதாரணமாக சமச்சீர் உணவு கொடுத்து வளர்த்தால் ஐந்து மாதத்தில் 1.300 கிலோ முதல் 1.400 கிலோ வரை எடை கிடைக்கும்.
உணவு தேட ஒரு கோழி நாள் முழுக்க காடு, மேடு என அலைந்து திரிந்து தனது சக்தியை விரயம் செய்ய வேண்டி வரும். ஆனால், பண்ணையில் வளர்க்கும் நாட்டுக் கோழிகள் அப்படியல்ல; தேவையான அளவு சமச்சீர் உணவு கொடுத்து பராமரித்தால் மூன்று மாதத்தில் அதே எடைக்கு வந்து விடும். நல்ல விலையும் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**அரசு சார்பில் 5,360 டன் புதிய நெல் கொள்முதல் கூடுதல் நிலையம் திறக்க நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:55 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நான்கு நெல் கொள்முதல் நிலையங்களில் 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், கூடுதலாக ஆறு கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால்கள் பாசன வசதி பெறுகிறது. ஏப்ரல் 15ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடை தற்போது நடக்கிறது. நெல் கொள்முதலுக்காக முதல்கட்டமாக பவானி தாலுகா அத்தாணி, பெருந்துறை தாலுகா காஞ்சிகோவில், கோபி தாலுகா நஞ்சப்பகவுண்டன் பாளையம், ஒத்தக்குதிரை ஆகிய நான்கு இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. இங்கு 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள சன்ன ரக நெல்லுக்கு 11 ரூபாய், மோட்டா ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்படுகிறது. அத்தாணியில் 4,608 டன், காஞ்சிகோவில் 2,911 டன், நஞ்சகவுண்டன்பாளையம் 3,088 டன், ஒத்தகுதிரை 2,762 டன் சேர்ந்து மொத்தம் 5,036 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அறுவடைப் பணி தீவிரமாக நடப்பதால்,

விவசாயிகள் கூடுதலாக கொள்முதல் நிலையங்களை திறக்க வலியுறுத்தினர். இதன்படி, கூகலூர், கள்ளிப்பட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் விஸ்வநாதன் கூறியதாவது: மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நான்கு கொள்முதல் நிலையங்களிலிருந்து 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக கொள்முதல் நிலையங்கள் அமைக்க கலெக்டர் சுடலைக்கண்ணன் உத்தரவிட்டுள்ளார். கூடுதலாக கூகலூர், கள்ளிபட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்தி விலை உயர்ந்தது எதிர்பார்த்த வரத்தில்லை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:54 IST

திருப்பூர் : திருப்பூர் மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் பருத் திக்கு 300 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள் ளது. ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு வரத்தில்லை.

திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண் காணிப்பாளர் (பொறுப்பு) ஆறுமுகராஜன் கூறியதாவது: திருப்பூருக்கு திருச்சி மற்றும் புதுக்கோட்டை பகுதியில் இருந்து பருத்தி ஏலத்துக்கு வருகிறது. நான்கு வாரங்களாக பருத்தி விலை உயர்ந்து வருகிறது; ஆனால், வரத்து வெகுவாக குறைந்துள்ளது. இன்று (நேற்று) விற்பனைக்கு 10 குவிண்டால் பருத்தி வந்திருந்தது. அதிகபட்சமாக குவிண்டால் 4,100 ரூபாயில் இருந்து 4,400 ரூபாயாக உயர்ந்தது. வரும் வாரங்களில் பருத்தி வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சோளம் 61 குவிண்டால்; கம்பு 34; தேங்காய் 17; வர மிளகாய் 30; ராகி 4; எள்ளு 5 குவிண்டால் விற் பனை செய்யப்பட்டது. பருத்தி குவிண்டால் 3,500 முதல் 4,400 ரூபாய் வரை; சோளம் 1,000 முதல் 1,300 வரை; கம்பு 900 முதல் 1,000 வரை; வரமிளகாய் 3,000 முதல் 5,000 வரை; ராகி 9,00 முதல் 1,000 வரை; எள்ளு 3,000 முதல் 3,500 வரை; தேங் காய் ஐந்து முதல் ஆறு ரூபாய் வரை விற்றது, என்றார்.

**பயிர்க்கடன் பெற கட்டுப்பாடு தளர்த்தப்படுமா?: கூட்டுறவு சங்கத்தை நாடும் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:51 IST

உடுமலை : தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சாகுபடி பணி தீவிரமடைந்துள்ள நிலையில், கட்டுப்பாடுகளை தளர்த்தி கடன் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., இரண்டாம் மண்டலம் மற்றும் அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இரண்டு பாசன திட்டங்களிலும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கரில் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன. சாகுபடி பணிக்கான செலவினங்களுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படும் பயிர்க்கடனை மட்டுமே விவசாயிகள் நம்பியுள்ளனர். இந்நிலையில், பயிர்க்கடன் பெற கூட்டுறவு சங்கங்களில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

விண்ணப்பத்துடன் விளைநிலத்தின் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்த முடிவுகளை இணைக்க வேண்டும். கிராமப்பகுதியில் இவ்வகை பரிசோதனையை செய்ய எவ்வித வசதியும் இல்லை. இதனால், விவசாயிகள் பரிசோதனைக்காக அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பரிசோதனையை மேற்கொள்ள தேவையான வசதியை அரசு ஏற்படுத்திய பின், இத்திட்டத்தை கட்டாயப்படுத்தலாம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். குழப்பம் ஏற்படுத்தும் காப்பீட்டு திட்டம்: இந்தாண்டு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து பயிர்களையும் காப்பீடு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்க்கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீடு திட்டம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் கிடைக்கும் பலன் மற்றும் நடைமுறை குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை.

கோவை மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில்  உள்ள ஏழு வட்டாரங்களுக்கு வானிலை சார்ந்த பயிர்க்காப்பீட்டு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தில், சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு பிடித்தம் செய்யப்படும் பிரீமிய தொகை ஓராண்டு வட்டிக்கு இணையாக உள்ளது. அதிக தொகை பயிர்க்கடனில் பிடித்தம் செய்யப்படும் நிலையில், இத்திட்டத்தால் முழுமையான பலன் கிடைக்குமா என்பது விவசாயிகளிடம் கேள்விக்குறியை உருவாக்கியுள்ளது. உதாரணமாக தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் மக்காச்சோள சாகுபடிக்கு 7,000 ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இதில், ஏக்கருக்கு 276 ரூபாய் காப்பீடு பிரீமியமாக பிடித்தம் செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடி ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் கடனாகவும், 826 ரூபாய் பிரீமியமாகவும் பிடித்தம் செய்யப்படுகிறது.

பருத்திக்காக பயிர்க்கடன் பெறும் விவசாயி ஓராண்டில் கடன் தொகையை செலுத்த முடியாவிட்டால், அவருக்கு 840 ரூபாய் வட்டியாக கணக்கிடப்படும். இதற்கு இணையாக காப்பீடு

பிரீமிய தொகை 826 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. கட்டாயப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "பல்வேறு திட்டங்களின் கீழ் பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. ஆனால், பயிர்கள் பாதிக்கப்படும்போது நிவாரணம் கிடைப்பதில்லை. வருவாய் உள்வட்டம் முழுவதும் பயிர்கள் பாதிக்கப்பட்டால் மட்டுமே குறைந்தளவு நிவாரணம் கிடைக்கிறது. தற்போதைய காப்பீடு திட்டத்தில் நிவாரணம் கிடைக்க நடைமுறை எதுவும் குறிப்பிடப்படவில்லை. கணிசமான தொகை பிடித்தம் செய்யப்படுவதால், செலவினங்களுக்கு பிரச்னை ஏற்படுகிறது. அரசு இதுகுறித்து பரிசீலனை செய்து பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்,' என்றனர்.

**கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:51 IST

கரூர்: "கரூர் உழவர்சந்தையில் ஆகஸ்டில் 730 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது' என, உழவர்சந்தை நிர்வாக அலுவலர் கணேசன், உதவி அலுவலர் மகாவிஷ்ணன் அறிவித்துள்ளனர்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உழவர்சந்தை செயல்படுகிறது. கரூர் உழவர்சந்தையில் தினசரி 20 டன் காய்கறி சராசரியாக விற்பனை செய்யப்படுகிறது. 90 விவசாயிகள் கடை அமைத்து தங்கள் விளைபொருட்களை கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். பண்டிகை நாட்களில் 25 டன் வரை காய்கறி விற்பனை செய்யப்படுகிறது. ஆகஸ்டில் கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இதன் மதிப்பு 95 லட்சம் ரூபாய். 5,700 விவசாயிகள் பொருட்களை விற்பனை செய்துள்ளனர். நுகர்வோர் 1.46 லட்சம் பேர் சந்தைக்கு வந்துள்ளனர். உழவர்சந்தையில் தற்போது நெல்லிக்காய், மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், நெல்லிக்காய் கிலோ 25க்கும், மாங்காய் கிலோ 40க்கும், கொய்யா 18க்கும், சோளக்கதிர் 10 ரூபாய்க்கும், காலிபிளவர் 12க்கும், எலுமிச்சை 2 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:08 IST

மதுரை : பருப்பு விலையை குறைக்க, தமிழகத்தில் 3200 ஏக்கரில் அனைத்து வித பயறுகளையும் பயிரிட, விவசாயிகளுடன் மத்திய அரசு, உலக வங்கி மற்றும் டாடா நிறுவனம் ஒப்பந்தம்

செய்துள்ளன. இதன்மூலம் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

இந்தியாவில் பருப்பு விளைச்சல் குறைவாக இருப்பதால், கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கான வரி, போக்குவரத்து செலவு போன்ற காரணங்களால் பருப்பு விலை அதிகரிக்கிறது. இதை தவிர்க்க, உலக வங்கி, மத்திய அரசு மற்றும் டாடா நிறுவனம் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. இதன்படி, பஞ்சாப் மற்றும் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3200 ஏக்கர் பாசன நிலங்களை தேர்வு செய்துள்ளனர். அனைத்து வித பயிர்களையும் பயிரிட, விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் செய்ய உள்ளனர். இதுதொடர்பாக விவசாயிகளிடம் டாடா நிறுவனம் சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு நிச்சயம் 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், அறுவடை செய்த பயிர் மற்றும் உற்பத்தி செய்யப்படும் பருப்புகளை நேரடியாக மக்களிடம் விற்க வர்த்தகர்களிடம் டாடா நிறுவனம் பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளது. பொதுவாக, வெளிமாநிலங்களில் இருந்து பருப்புகளை கொண்டு வரும்போது, போக்குவரத்து செலவு, மாநில வரி என நூறு கிலோ மூடைக்கு 250 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை கூடுதல் செலவாகும். "இந்த புதிய முயற்சியால், இந்த செலவு கட்டுப்படுத்தப்படும் என்பதால், அனைத்து பருப்புகளின் விலையும் குறையும்; கட்டுப்பாட்டில் இருக்கும்' என்கின்றனர் வர்த்தகர்கள்.

**மாறாத அரிசி விலை: தொடருமா இந்நிலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:47 IST

மதுரை : மதுரையில் சில வாரங் களாவே அரிசி விலையில் மாற்றம் இல்லை.இந்நிலை தொடருமா என, அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரனிடம் கேட்டபோது, ""தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரத்து சீராக இருப்பதால் தற்போதைக்கு விலை உயர்வில் மாற்றம் இருக்காது. அதேசமயம், மொத்த விற்பனை கடையிலும், சில்லரை கடைகளிலும் கிலோவிற்கு 2 ரூபாய் முதல் ஒரு ரூபாய் வரை விலை மாறுபடுகிறது,'' என்றார்.

அரிசி விலை குறித்து கூறியதாவது :கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும்

விற்கப்பட்டது.ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது என்றார்.

**சீரான விலையில் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:47 IST

மதுரை : மதுரை மாட்டுத்தாவணி புதிய சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், சீரான விலையில் விற்கப்படுகிறது. அடுத்தடுத்து வரும் முகூர்த்த நாட்களில் விலை உயர வாய்ப்புள்ளது.நேற்றைய காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர்

முருகன் கூறியதாவது :ஒரு கிலோ தக்காளி 12 ரூபாய், உருட்டு தக்காளி 10, கத்தரிக்காய் 20, வெள்ளை கத்தரிக்காய் 15, பூசணிக்காய் 5, புடலைங்காய் 8, வெண்டைக்காய் 12, சுரைக்காய் 5, பச்சை மிளகாய் 15, ஆந்திரா பச்சை மிளகாய் 12, வெங்காயம் 12, சிறியது 10, பாகற்காய் 16, சிறியது 30, உருளை கிழங்கு 10-15, சேனை கிழங்கு 25, கருணை கிழங்கு 30, பீன்ஸ் 20, பட்டர் பீன்ஸ் 30, சோயா பீன்ஸ் 25, பட்டாணி 30, அவரைக்காய் 20, கொத்தவரை 7, இஞ்சி 20, நூக்கல் 12, முள்ளங்கி 10, கேரட் 10-15, பீட்ரூட் 10, காலிபிளவர் 7-10, முருங்கைக்காய் 15, கீரை வகைகள் 10, புதினா 12, கொத்தமல்லி 7, கறிவேப்பிலை 10, முட்டைகோஸ் 8, சவ்சவ் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**மாதுளை விலை கிலோ ரூ.120**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:47 IST

மதுரை : மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து மதுரைக்கு மூன்று நாட்களுக்கு ஒருமுறை மாதுளை பழங்கள் கொண்டு வருவதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது.நேற்று கிலோ 120 ரூபாய்க்கு விற்கப்பட்டது. காபூல் மாதுளை 130 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற பழங்கள் குறித்து, யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது :ஒரு கிலோ ஆப்பிள் 60-90 ரூபாய், பன்னீர் திராட்சை 50, தில்குஷ் திராட்சை 60, மலை வாழைப்பழம் ஒன்று 5, சீத்தாப்பழம் கிலோ 25,

அன்னாசி 25, சாத்துக்குடி 30, பேரிக்காய் 70, ஆஸி., ஆரஞ்சு 120, பப்பாளி 20, நெல்லிக்காய் 40, கிர்னிப்பழம் 25, மோரீஸ் வாழைப்பழம் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.

**உளுந்தம் பருப்பு தொடர்ந்து உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:46 IST

மதுரை : உளுந்தம் பயறு, பருப்பு உற்பத்திகுறைவால், மதுரையில் இதன் விலை தொடர்ந்து அதிகரிக்கிறது.பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன்கூறியதாவது :கடந்த வாரம் 4200 ரூபாய்க்கு விற்ற நூறு கிலோ உளுந்தம் பயறு நேற்று 5700 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பருப்பு 7500 ரூபாயில் இருந்து 8100 ரூபாய்க்கும், துவரம் பயறு 4200 ரூபாயில் இருந்து, 3700 முதல் 4000 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.பருப்பு 5700லிருந்து 6000 ரூபாய் வரையிலும், பாசிப் பயறு 4200 ரூபாயிலிருந்து 4050 ரூபாயாகவும், பருப்பு 6000 ரூபாயில் இருந்து 6200 ரூபாய்க்கும் விற்கப்பட்டது என்றார்.

**தேங்காய் எண்ணெய் விலை தொடர்ந்து உயரும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:46 IST

மதுரை : தேங்காய் கொப்பரை உற்பத்தி குறைவால், மதுரையில் தேங்காய் எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரிக்கும் அபாயம் உள்ளது.கடந்த வாரம் 1030 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் தேங்காய் எண்ணெய், நேற்று காலை 1060 ரூபாய்க்கும், மதியம் 1100 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. ""இன்னும் சில நாட் களில் 1125 ரூபாய்க்கு விற்றாலும் ஆச்சரியமில்லை,'' என்கிறார் மதுரை எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி.மற்ற எண்ணெய் விலை குறித்து அவர் கூறியதாவது :
கடலை எண்ணெய் 1360 ரூபாய், ரைஸ்பிரான் ஆயில் 780, வனஸ்பதி 800, நல்லெண்ணெய் 1210, தும்பை நல்லெண்ணெய் 1600 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. கர்நாடகாவிலிருந்து புது வரத்து அதிகரித்துள்ளதால், சூரியகாந்தி எண்ணெய் 960 ரூபாயிலிருந்து 920 ரூபாயாக குறைந்தது என்றார்.

**எண்ணெய் வித்துசாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,03:21 IST

தென்காசி:தென்காசி அருகே தேன்பொத்தையில் எண்ணெய் வித்து பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி அருகே தேன்பொத்தையில் ஐசோபாம் எண்ணெய் வித்துகள் சாகுபடி பற்றிய பயிற்சி முகாம் நடந்தது. நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்து பேசும் போது, விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ள வேண்டும். நிலக்கடலை பயிரை தாக்கும் வேரழுகல் நோயை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதையுடன் கார்பெண்டாசிம் 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் மருந்தை கலந்து விதைக்க வேண்டும். '

நிலக்கடலை வேர் முடிச்சுகளை உருவாக்கும் பயிராதலால் ரைசோபியம் உயிர் உரத்தை விதை நேர்த்தி செய்தும், வயலில் இட்டும், தழைச் சத்தை மிச்சப்படுத்தலாம். வேளாண்மை துறையால் வழங்கப்படும் நுண்ணுர கலவை ஏக்கருக்கு 5 கிலோ இடுவதால் பயிர் செழிப்புடன் வளர்ந்து அதிக மகசூல் அளிக்கும் என்றார்.தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் துரைப்பாண்டியன் பேசும் போது, நிலக்கடலையில் திரட்சியான கடலை கிடைக்க ஜிப்சம் ஏக்கருக்கு 160 கிலோ என்ற அளவில் இட வேண்டும் என்றார்.

விதை சான்று உதவி இயக்குநர் பிரமநாயகம், விதை சான்று அலுவலர் அசோகன் எண்ணெய் வித்துகளில் விதை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்தனர். வேளாண்மை அலுவலர் உதயகுமார் நிலக்கடலையில் உரக்கலவை கரைசல் தெளிக்கும் முறை குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் லட்சுமி நாராயணன் பாலிதீன் விரிப்பில் நிலக்கடலை சாகுபடி செய்யும் உத்தி குறித்து பேசினார்.விவசாயிகளுக்கு எண்ணெய் வித்துகள் சாகுபடி குறித்த தொழில் நுட்பங்களை விளக்கும் கருத்து காட்சி நடந்தது. ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சபரிராஜன், நாகராஜன், பரமசிவன், மாரியப்பன், அன்சர் அலி, குமார் செய்திருந்தனர்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:00 IST



தரமான பட்டுக்கூடு உற்பத்திக்கு உயிர் உரங்கள்: உழவர்கள் மல்பெரி செடிகளை பயிரிட்டு அதன் இலைகளை பட்டுப் புழுக்களுக்கு உணவாகக் கொடுத்துவிடுகின்றனர். பட்டுப்புழுவின் வளர்ச்சி கூடுகளின் விளைச்சல், மல்பெரி இலைகளின் தரத்தைச் சார்ந்து இருக்கிறது. அதிக மாவுச்சத்து, புரதச் சத்துள்ள இலைகளைப் பட்டுப் புழுக்கள் நன்கு உண்ணுவதால் தரமான பட்டுக்கூடு மகசூல் கிடைக்கும். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, வி.ஏ.மைக்கோரைசா ஆகியவை மல்பெரி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் உயிர் உரங்களாகும்.

**அசோஸ்பைரில்லம்:** மல்பெரி செடிகளுக்கு இதை இடுவதால் காற்றில் உள்ள 78 சதவீதம் தழைச்சத்தை மல்பெரி பயிர் உட்கொள்ளும். ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லத்தை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து மண்ணில் இடவேண்டும். இதை ஒவ்வொரு முறையும் வேதி உரம் இட்ட 10 நாட்களுக்குப் பிறகு இடவேண்டும். இதனால் இலை மகசூல் 10 சதவீதம் அதிகரிக்கும். விதைக்குச்சிகளின் முளைப்புத்திறன் 10 சதவீதம் அதிகரிக்கும். வேர்களின் வளர்ச்சி அதிகரிக்கப்படுவதால் அதிக தாதுச்சத்துக்களை மண்ணிலிருந்து கிரகித்துக் கொள்ள முடிகிறது. வைட்டமின்கள், ஆன்டிபயாடிக் ஆகியவற்றை உற்பத்தி செய்து பயிருக்கு பலத்தை அளிக்கின்றன. அசோஸ்பைரில்லம் இட்ட மல்பெரி இலைகளை உண்ணும் பட்டுப்புழுவின் கூடுகள் 10 சதவீதமும், பட்டுநூலின் எடை 12 சதவீதமும் அதிகரிப்பதாக ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்குத் தேவையான மல்பெரி விதைக்கரணைகளை 800 கிராம் அசோஸ்பைரில்லம் 40 லிட்டர் நீர் கலவையில் 10 நிமிடம் வைத்து பின் நடவேண்டும். பாஸ்போபாக்டீரியா நிலத்தில் இருக்கும் மணிச்சத்தை எடுத்துக் கொள்வதால் முக்கியமான நுண்ணுயிராகக் கருதப்படுகிறது. கரையாத மணிச்சத்தை கரைத்து மல்பெரிக்கு எடுத்துக் கொடுக்கிறது. இதனால் இலை மகசூல் அதிகரிக்கிறது. இலைகளின் பச்சையம், மாவுச்சத்து, புரதச்சத்து அதிகரிக்கின்றன. பட்டுப்புழு கூட்டின் தரமும் எடையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அசோஸ்பைரில்லம் போன்றே இதையும் இடவேண்டும்.

**வி.ஏ.மைக்கோரைசா:** இந்த நுண்ணுயிர் பூசன வகையைச் சார்ந்தது. இது வேர்பகுதியின் அருகில் கிடைக்காத மணிச்சத்தை மண்ணில் படர்ந்து சென்று எடுத்து வேர்ப்பகுதிக்கு கிடைக்குமாறு செய்கிறது. இந்த நுண்ணுயிர் மணிச்சத்தை மட்டுமல்லாமல் நுண்ணூட்டச் சத்துக்களான துத்தநாகம், தாமிரம், சுண்ணாம்புச் சத்து, மக்னீசியம் ஆகியவற்றையும் மல்பெரி அதிக அளவில் எடுத்துக்கொள்ள உதவுகிறது. வேரைத் தாக்கும் சில கிருமிகள், நூற்புழுக்கள் ஆகியவைகளிடம் இருந்து மல்பெரியை பாதுகாக்கிறது. இப்பூசணம் மண்ணில் உள்ள நன்மை தரும் நுண்ணுயிர்களை ஊக்குவிக்கிறது.

**இடும் முறை:** மல்பெரியில் இப்பூசணம் நாற்றங்காலுக்கு மட்டும் பரிந்துரை செய்யப்படுகிறது. ஒரு சதுர மீட்டருக்கு 100 கிராம் வி.ஏ.மைக்கோரைசா பூசணத்தை ஒரு கிலோ தொழு உரத்துடன் கலந்துநாற்றங்காலில் விதைக்கரணை நடும்பொழுது இடவேண்டும்.

**(தகவல்: கா.ராமமூர்த்தி, செல்வி மா.ரேவதி, ரா.பாலகுருநாதன், பட்டுப்புழு வளர்ப்பு துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003)**

**பருத்தியில் மாவுப்பூச்சி மேலாண்மை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:00 IST



**மாவுப்பூச்சியின் தோற்றம்:** இது உடல் முழுவதும்மாவு மற்றும் மெழுகுபூச்சுடன் கூடிய 2.2 மி.மீ. நீளம் மற்றும் 1.5 மி.மீ. பருமனும் உடைய மிகச்சிறிய பூச்சியாகும். இவ்வகை மாவுப்பூச்சிகள்

பெரும்பாலும் இளஞ்சிவப்பு நிறத்திலும், சிலவ கை வெள்ளை, கரு ஊதா மற்றும் மஞ்சள் நிறத்திலும் காணப்படும். உடலின் பக்கவாட்டிலும் பின்பகுதியிலும் மெழுகு போன்ற 17 இணை நீட்சி இழைகள் காணப்படும்.

**மாவுப்பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்:** தாக்கப்பட்ட செடிகளில் மஞ்சள்நிறமான காய்ந்த வளைந்த, நெளிந்த மற்றும் வளர்ச்சி குன்றிய குருத்துகள் காணப்படும். இலையின் அடிப்பகுதி, குத்து கிளைகள் மற்றும் தண்டுப்பகுதிகளில் வெள்ளையாக அடைபோல் மாவுப்பூச்சிகள் படர்ந்து இருக்கும். சிவப்பு மற்றும் கருப்பு எறும்புகளின் நடமாட்டம் இருக்கும். பளபளப்பான ஒட்டும் தன்மை கொண்ட தேன் போன்ற திரவம், இலை மற்றும் இதர பாகங்களிலும் காணப்படும். தேன் போன்ற திரவத்தின் மேல் கேப்னோடியம் எனப்படும் கருநிற பூசணத்தின் தாக்குதல் தென்படும். அதிகளவு தாக்கப்பட்ட செடிகள், இலைகள் உதிர்ந்து வாடி, கருகிவிடும்.

**மாவுப்பூச்சி பூச்சி மேலாண்மை:** இளம் பருவத்திலிருந்தே பருத்தி செடிகளில் மாவுப்பூச்சி மற்றும் எறும்புகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். களைளை அகற்றி வயல்களை சுத்தமாக வைக்க வேண்டும். மற்றும் தோட்டத்தைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் இருக்கும் களைகளையும் அப்புறப்படுத்தி எரித்துவிட வேண்டும். பூச்சிகள் தாக்கப்பட்ட செடிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து அழிப்பதன் மூலம் பூச்சிகள் அதிகம் பரவாமல் தடுக்கலாம். பாதிப்பின் ஆரம்ப காலத்தில் அதாவது தாக்குதல் குறைவாக இருக்கும் போதே பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டும்.

ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் அதிகம் இருக்கும்போது பூச்சிகொல்லிகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும். மாவுப் பூச்சியின் சேதம் குறைவாக இருக்கும்போது வேப்பெண்ணெய் 2 சதம் அல்லது வேப்பங்கொட்டை பருப்புச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப்பு 40 கி/லி என்ற அளவில் தாக்கப்பட்ட செடிகள், அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தெளிக்கவும். சேதம் அதிகமாக தென்படும்போது பின்வரும் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம்.

தேவைப்பட்டால் 15 நாட்களுக்கு பின் மீண்டும் ஒருமுறை செடிகள் நன்கு நனையும்படி தெளிக்கவும்.

புரோபனோபாஸ் 50 இசி-2மிலி/லி, குளோர்பைரிபாஸ் 20 இசி-5மிலி/லி., புப்ரோபைசின் 25 எஸ்சி-0.75 மிலி/லி, தயோமீத்தாக்சம் 25 டபிள்யூ.டி.ஜி.-0.5மிலி/லி, இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல்-0.5மிலி/லி, மீன் எண்ணெய் சோப்பு-40கி/லி. ஒரே பூச்சிக்கொல்லியை தொடர்ந்து பயன்படுத்தாமல் சுழற்சி முறையில் வெவ்வேறு பூச்சிகொல்லிகளை தேவைக்கேற்ப உபயோகிக்கவும். பல பூச்சிகொல்லிகளை கலந்து பயன் படுத்தக்கூடாது. கைத்தெளிப்பானைக் கொண்டு தெளிப்பது நல்ல பலனைத்தரும். தேவைப்பட்டால் புரோபனோபாஸ் (அ) டைமெத்தோயேட் பூச்சிகொல்லியுடன் வேப்பெண்ணெய் 20மிலி அல்லது நிம்பிசிடின் 10,000 பி.பி.எம். 2 மிலி என்ற அளவில் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். இப்பூச்சி பொதுவாக மிதமானது முதல் அதிக வெப்பநிலைகளில் விரைவாக பரவும் தன்மை கொண்டதால் விவசாயிகள்

தங்களது பயிர்களை தக்க தருணங்களில் மேற்கூறிய தகுந்தவழிமுறைகளைக் கடைபிடித்து மகசூலை அதிகரிக்கலாம்.

**கோ.சீனிவாசன் மற்றும் எஸ்.குமார்,வேளாண்மை அறிவியல் நிலையம்,வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை.**

**பயிர்களின் வளர்ச்சியில் உயிர் உரத்தின் பங்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:00 IST

வேர் உட்பூசணம் மண்ணிலுள்ள தாதுப்பொருள்களை (தழை, மணி, சாம்பல் சத்துக்களை) சேகரித்து தாவரத்திற்கு அளிக்கிறது. வேர் உட்பூசம் வேரின் புறப்பரப்பிலுள்ள பூஞ்சியுறை தாதுப் பொருட்களின் களஞ்சியமாக அமைகின்றன. மண் இடுக்குகளில் சேகரிக்கப்பட்ட தாதுப்பொருள் பூஞ்சியுறையில் சேமிக்கப் படுகின்றன. எனவே தாவர வேர்கள் மிக எளிதாக தாதுப்பொருட்களை உறிஞ்சிக் கொள்கின்றன. மண்ணில் கட்டுண்ட பாஸ்பேட் சேர்மங்களை வேர் உட்பூசணமான மைக்கோரைசா கரையக்கூடியதாக்கி விடுகின்றன. எனவே மண்ணில் ஏற்படும் பாஸ்பரஸ் (மணிச்சத்து) பற்றாக்குறை நிவர்த்தியாக்கப்படுகிறது.

வேர் உட்பூசணத்தின் உதவியோடு தாவர வேர்கள் தாதுப்பொருட்களை எளிதாக உறிஞ்சிக் கொள்கின்றன. பயிர்களைத் தாக்கும் வேர் அழுகல் நோய் மற்றும் வேரைத் தாக்கும் நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாத்து மைக்கோரைசா, பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. மைக்கோரைசா வேர் உட்பூசணத்தில் உள்ள ஹைபாக்கள் அதிக நீரை ஈர்த்து தேக்கி வைத்துக் கொள்வதால் பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாக்கின்றன. மைக்கோரைசா உயிர் உரத்தை விவசாயிகளே மக்காச்சோளப் பயிரின் வேரில் பெருக்கி தங்களின் விளைநிலங்களில் சேர்த்து பயிர்களின் மகசூலை கூடுதலாக பெருக்கிக் கொள்ளலாம்.

**தகவல் தொடர்புக்கு:** சொ.தாமரைச்செல்வி, உதவி ஆராய்ச்சி அலுவலர், உயிரியல் ஆய்வு மையம் அல்லது ராம.கந்தசாமி, பூச்சியியலார், உயிரியல் ஆய்வு மையம், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், 044-2743 1393, 98407 59983 தொடர்பு கொள்ளலாம்.

**-சொ.தாமரைச்செல்வி, எம்.எஸ்சி (வேளாண்மை),**

**உதவி ஆராய்ச்சி அலுவலர்**

**ராம.கந்தசாமி, பூச்சியியலர்,**

**உயிரியல் ஆய்வு மையம்,**

**தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம்,**

**வெண்பாக்கம், செங்கல்பட்டு-603 111.**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:00 IST



**புதிய ரகம்:** த.வே.ப.க. நிலக்கடலை கோ.6: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள இந்த நிலக்கடலை ரகம் எக்டருக்கு மானாவாரியில் 1914 கிலோ காய்கள் மகசூலாகக் கொடுக்கிறது. இது வி.ஆர்.ஐ. ஜி.எண்.7, உள்ளூர் நிலக்கடலை ரகங்களைவிட முறையே 29.4 மற்றும் 77.1 சதம் அதிக மகசூலாகும். இந்த புதிய ரகத்தின் வயது - 125-130 நாட்கள். பருவம்: மானாவாரியாக வைகாசிப் பட்டத்தில் பயிரிட ஏற்றது. **அதிகபட்ச மகசூல்:** 3236 கிலோ/எக்டர்.

**உருவாக்கம்:** சி.எஸ்9/ஐ.சி.ஜி.எஸ்5 கலப்பின சந்ததிகளில் தேர்வு செய்யப்பட்டது.

**பயிரிட உகந்த மாவட்டங்கள்:** நாமக்கல் மாவட்டம்.

**இதன் சிறப்பியல்புகள்:** வறட்சியை தாங்கி வளரும் தன்மை; காய்கள் கொத்தாகக் காணப்படும்; உடைப்புத்திறன் 73.5 சதம். விரும்பத்தக்க வகையில் காய்களின் குணங்கள்; அதிக எண்ணெய்ச்சத்து (49.5 சதம்) கொண்ட பருப்புகள்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஆராய்ச்சி இயக்குனர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம்), கோயம்புத்தூர்-641 003. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

*** த.வே.ப.க. உளுந்து கோ.6:** இந்த புதிய உளுந்து ரகம் சமீபத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் வயது 60-65 நாட்கள். மகசூல்: 733 கிலோ/எக்டர். இது வம்பன் (பி.ஜி)4, வம்பன் (பி.ஜி)5 ரகங்களைவிட 13 மற்றும் 12 சதம் கூடுதல் மகசூலாகும். அதிக பட்ச மகசூல்: 1800 கிலோ/எக்டர். உருவாக்கம்: டி.யூ.2/வி.பி.20 ரகங்களின்

**இனக்கலப்பு. பருவம்:** புரட்டாசிப்பட்டம். பயிரிட உகந்த மாவட்டங்கள்: தமிழகத்தில் உளுந்து பயிரிடப்படும் மாவட்டங்களுக்கு உகந்தது.

**சிறப்பியல்புகள்:** குறுகிய கால ரகம்; ஒரே சமயத்தில் காய்கள் முதிர்ச்சி அடையும் தன்மை, காய்கள் வெடிக்காத பண்பு; பருமனான விதைகள், 100 விதைகளின் எடை 5.5 கிராம். அதிக மாவு தரும் தன்மை; மஞ்சள் தேமல், நுனிக்கருகல், வேர் அழுகல் நோய்களுக்கு ஓரளவு எதிர்ப்புசக்தி கொண்டது; அசுவினி, தண்டு ஈ, புள்ளி காய்ப்புழு தாக்குதலை தாங்கி வளரக்கூடியது.

**தினத்தந்தி**

***ஏற்றுமதி குறைந்துள்ள நிலையில் மிளகு இறக்குமதி அதிகரிப்பு***



*எஸ் சனந்தகுமார்*

*கொச்சி*

*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரையிலான நான்கு மாத காலத்தில் நம் நாட்டின் மிளகு இறக்குமதி, ஏற்றுமதியை விட அதிகரித்துள்ளது.*

போட்டி

*வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் கடும் போட்டியால் நம் நாட்டின் மிளகு ஏற்றுமதி குறைந்து போயுள்ளது. அதேசமயம், மதிப்பு கூட்டப்பட்ட மிளகு ஏற்றுமதிக்காக மேற்கொள்ளப்படும் மிளகு இறக்குமதி அதிகரித்துள்ளது என நறுமணப் பொருள்கள் வாரியத்தின் இயக்குனர் (சந்தைப்படுத்துதல்) சார்லஸ் ஏ கித்து தெரிவித்தார்.*

செப்டம்பர் – அக்டோபர் மாத காலத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கு எவ்வித ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் பல பன்னாட்டு இறக்குமதியாளர்கள், இந்தோனேஷியா நாட்டிலிருந்து குறைந்த விலையில் மிளகு இறக்குமதி செய்து கொள்வதுதான் இதற்கு காரணம் என பாஃப்னா என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் உயர்அதிகாரி ஜோஜன் மலயில் கூறினார்.
வியட்நாம் நாடும், நடப்பு ஆண்டில் இதுவரை ஒரு லட்சம் டன் மிளகை ஏற்றுமதி செய்துள்ளது.
இருப்பினும், இந்தியா இறக்குமதி செய்து கொள்ளும் அனைத்து மிளகு வகைகளும் மதிப்பு கூட்டப்பட்டு மறு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதற்காக இலங்கை, வியட்நாம் மற்றும் இந்தோனேஷியாவிலிருந்து மிக அதிக அளவில் இறக்குமதி செய்து கொள்ளப்படுகிறது என கித்து குறிப்பிட்டார்.
ஏற்றுமதி
நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தில் இந்தியாவின் மிளகு ஏற்றுமதி 6,750 டன்னாக இருந்தது. அதேசமயம் இதே காலத்தில் இதன் இறக்குமதி 7,400 டன்னாக இருந்தது. இறக்குமதி செய்யப்படும் மிளகில் 60 சதவீதம் நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோ ரெசின் தயாரிப்பு துறையினர் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பிற்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.
சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த மிளகு ஏற்றுமதி 19,750 டன்னாக இருந்தது. அவ்வாண்டில் மொத்த மிளகு இறக்குமதி 17,500 டன்னாக இருந்தது. மத்திய வர்த்தக அமைச்சகத்தின் வழிகாட்டுதலுக்கு இணங்க, நறுமணப் பொருள்கள் வாரியம் கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் மிளகு மறு சாகுபடி திட்டத்திற்காக ரூ.230 கோடி செலவில் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதேபோன்று கேரளா மாநிலத்தின் வயநாடு உள்ளிட்ட வேறு சில பகுதிகளிலும் மிளகு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நறுமணப் பொருள்கள் வாரியம் நடப்பாண்டில் ஒரு லட்சம் டன் மிளகு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. தற்பொழுது கேரளா மாநிலத்தில் மிளகு உற்பத்தி 45,000–50,000 டன் என்ற அளவில் உள்ளது.

**நடப்பு ஆண்டு ஜூலை மாதத்தில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 22% உயர்வு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
சென்ற ஜூலை மாதத்தில் நம்நாட்டிலிருந்து ரூ.790.55 கோடி (17 கோடி டாலர்) மதிப்பிற்கு கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளது. இது, சென்ற ஆண்டு ஜூலை மாத ஏற்றுமதியை விட 22 சதவீதம் அதிகமாகும். அம்மாதத்தில் 13.90 கோடி டாலர் மதிப்பிற்கு

*இதன் ஏற்றுமதி இருந்தது என கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.*

*ஐரோப்பிய நாடுகள்*

*நம்நாட்டிலிருந்து மிக அதிக அளவில் ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி ஆகிறது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டின் மொத்த கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி 26 சதவீத அளவிற்கு இருந்தது. இதனைதொடர்ந்து, ஜப்பான் (20 சதவீதம்) மற்றும் அமெரிக்கா (17 சதவீதம்) ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி ஆனது. ஜப்பான் நாடு 'பிளாக் டைகர்' எனப்படும் இறால் வகைகளை இந்தியாவிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்து கொள்கிறது.*

*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில் நாட்டின் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 63.80 கோடி டாலர் மதிப்பிற்கு உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 51.74 கோடி டாலராக இருந்தது.*

*இலக்கு*

*நடப்பு முழு நிதி ஆண்டில் 250 கோடி டாலர் மதிப்பிற்கு கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 200 கோடி டாலர் மதிப்பிற்கு இருந்தது. இது, முந்தைய ஆண்டை விட 12 சதவீதம் அதிகம் என கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.*

**அக்டோபர் மாதம் வரை சூரியகாந்திக்கு நல்ல விலை கிடைக்கும் கோவை வேளாண் பல்கலைக்கழகம் தகவல்**

*கோவை, செப்.8–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு மையத்தில் இயங்கிவரும் தேசிய வேளாண்மை புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக வெள்ளகோவில் சந்தையில் நிலவிய சூரியகாந்தி விலையை ஆய்வு செய்தது.*

*சாதாரணமாக ஒரு ஏக்கர் நீர்பாசன நிலத்தில் 800 முதல் 1,100 கிலோ வரை சூரியகாந்தி மகசூல் கிடைக்கும். ஆனால் இந்த பருவத்தில் தரமற்ற விதை, பூச்சித் தாக்குதல், வேலையாட்கள் தட்டுப்பாடு மற்றும் தொடர்ந்து சூரியகாந்தியை பயிரிட்டதுமே 450 முதல் 500 கிலோ வரை மகசூல் குறைவுக்கு காரணங்களாகும்.*

*ஆய்வு முடிவுகளின் படி செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் வரை சூரியகாந்தியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.23 முதல் 26 வரை இருக்கும். உயர்ரக விதைகளுக்கு ரூ.30 வரை கிலோவுக்கு விலை கிடைக்கும். வருகிற நவம்பர் மாதத்தில் விலை குறையவும் வாய்ப்பு*

இருக்கிறது என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.


எனவே விவசாயிகள் சூரியகாந்தி விதையை அறுவடை செய்ததும் உடனே விற்றுவிடும் படி கோவை வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது.

தின பூமி

## <u>வானிலை</u>

**சென்னை**

**$22^0$**



**வானம் தெளிவாக இருக்கும்**

| | |
|---|---|
| காற்றின் வேகம் | 2 கிமீ/மணிக்கு |
| அதிக அளவு : | 23 |
| குறைந்த அளவு : | 22 |

இன்றைய வெப்பநிலை மிதமாக இருக்கும்